**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.298/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கருணாநிதி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

15.11.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 11.07.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் முதுகுளத்தூர் சந்தைக்கு சென்றுவிட்டு எனது சொந்த ஊரான கொண்டுலாவிக்கு எனது இருசக்கர வாகனமான TVS XLல் சென்று கொண்டிருந்தபோது KS மகால் எதிரில் எனது வாகனத்தில் சத்தம் கேட்டதால் வாகனத்தை நிறுத்திவிட்டு அனைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்த நபர் என்னை இடித்து விட்டார். என்னை இடித்த நபரை பார்த்தார் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரிதான் வாகனத்தை ஓட்டி வந்து என்மீது இடித்தார்.

2) அதில் நான் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் எனது வலது முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது இடது கையில் வலி ஏற்பட்டது. உடனே அங்கிருந்தவர்கள் என்னை 108 ஆம்புன்சில் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதும் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்தபோதும் முதுகுளத்தூர் போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் முதுகுளத்தூரிலிருந்து கடலாடி ரோட்டில் தான் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு பின்னால் வந்து தான் எதிரியின் வாகனம் மோதியது என்றால் சரிதான். வாகனம் மோதியவுடன் நான் கீழே விழுந்து அடிபட்டு மயங்கிவிட்டேன் என்றால் சரிதான். நான் மயங்கிய உடன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என்னை 108 ஆம்புன்ஸ் மூலமாக மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் சரிதன்.

2) விபத்து நடந்தபோது வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். எனக்கு எப்போது சுயநினைவு வந்தது என்றால் ஒரு நபர் தண்ணீரை என் முகத்தில் தெளித்தவுடன் சுயநினைவு வந்தது. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவரிடன் என்னை இடித்த வாகனத்தின் பதிவு எண்ணையும் எதிரியின் பெயரையும் கூறினேனா என்றால் கூறினேன். என்னுடன் வந்தவர்கள் கூறியதால் வாகனத்தின் பதிவு எண்ணையும் எதிரியின் பெயரையும் கூறினேன்.

3) நான் காவல் நியைத்திற்கு செல்லவில்லை என்றால் இல்லை முதல் தகவல் அறிக்கை வாங்குவதற்கு சென்றேன். என்னிடம் புகாரை யார் எழுதி வாங்கினார்கள் என்றால் தெரியாது. அவர்களது பதவி தெரியுமா என்றால் தெரியாது. நான் தான் புகார் மனுவை எழுதி கொடுத்தேன். KS மகால் அருகே இரண்டு வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வேகத்தடை உள்ளதால் எந்த வாகனமும் வேகமாக செல்ல முடியாது என்றால் சரியல்ல.

4) நான் மதுபோதையில் இருசக்கர வாகத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டு விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன்

என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.298/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : காந்தி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

15.11.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஸ்டுடியோ வைத்துள்ளேன். 11.07.2024 ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் எனது தொழில் சம்பந்தமாக கடலாடி சென்றுவிட்டு நானும் எனது நண்பர் மணிகண்டனும் திரும்ப முதுகுளத்தூர் வந்து கொண்டிருந்தபோது KS மகாலுக்கு எதிர்புறம் அ.சா.1 கருணாநிதி கால் ஒடிந்து கீழே விழுந்து கிடந்தார். இருசக்கர வாகனத்தில் யாரோ அவரை இடித்து விட்டதாக கூறினார். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. நான் 108 ஆம்புன்சிற்கு போன் செய்து அ.சா.1 யை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 கருணாநிதி எனக்கு தெரிந்த நபர். விபத்து ஏற்பட்ட விவரம் அ.சா.1 சொன்ன பிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.298/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : மணிகண்டன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

15.11.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பூக்கடை வைத்துள்ளேன். 11.07.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் கடலாடியில் இருந்து முதுகுளத்தூர் நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். அப்போது KS மகாலுக்கு எதிர்புறம் அ.சா.1 கருணாநிதி கால் ஒடிந்து கீழே விழுந்து கிடந்தார். இருசக்கர வாகனத்தில் யாரோ அவரை இடித்து விட்டதாக கூறினார். நான் 108 ஆம்புன்சிற்கு போன் செய்து அ.சா.1யை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் பார்க்கும்போது கூட்டமாக இருந்தது அ.சா.1 கருணாநிதி மயங்கி கீழே கிடந்தார் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்றால் இல்லை. அ.சா.1ம் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும் அ.சா.1ம் ஒரே சங்கத்தில் தான் உள்ளோம் என்றால் சரிதான். அ.சா.1ம் நானும் பூ வியாபாரம்

செய்கிறோம் என்றால் சரிதான். இரண்டு வேகத்தடைக்கும் நடுவில் தான் அ.சா.1 அடிபட்டு கிடந்தார் என்றால் வேகத்தடைக்கு அருகில் அடிபட்டு கிடந்தார்.

2) நான் அ.சா.1 அடிபட்டதை நேரில் பார்க்கவில்லை என்றாலும் அவர் எனது உறவுமுறை என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரியை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னிடம் வாக்குமூலம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

STC.No.298/2024
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : பூமிநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of November 2024.

<u>15.11.2024</u>

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் எதுவும் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1.** கடந்த 12.07.2024ம் தேதி 12.45 மணியளவில் நானும், இளவரசன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில்

கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.